# பத்தாண்டுத்
# தொலைநோக்குத் திட்டம்
# கருத்துரு அறிக்கை
## ( THE CONCEPT PAPER )

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

**முனைவர் சி.சுப்பிரமணியம்**
**துணைவேந்தர்**

பெறுநர்

6. முனைவர் இளவரசு,
முதுநிலைப் பேராசிரியர் (ஓய்வு),
2, பிச்சையம்மாள் நகர்,
காஜாமலை,
திருச்சி – 23

பேரன்பிற்குரியீர்,

வணக்கம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அடுத்த பத்தாண்டுக்கான செயல் திட்டத்தை வகுத்தளிக்க ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அளிக்க உள்ள வரைவு அறிக்கைக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் தங்களுடைய சீரிய கருத்துக்களை அறியும் பொருட்டு இத்துடன் கருத்துரு அறிக்கையும், வினா நிரல் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளன.

முழுமையான திட்ட அறிக்கையை உருவாக்கத் தங்கள் தகவார்ந்த கருத்துக்களும் உதவும் என்பது உயர் மட்டக் குழுவின் நம்பிக்கை.

தாங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கருதி, வினா நிரலைத் தங்கள் நற்கருத்துக்களால் நிறைவு செய்து ~~ஏப்பிரல்~~ மே திங்கள் 10ஆம் நாளுக்குள் (10-05-2006) அனுப்பியுதவ உயர்மட்டக் குழுவின் சார்பில் வேண்டிக் கொள்ளுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

சி.சுப்பிரமணியம்

தஞ்சாவூர்
25-03-2006

(சி. சுப்பிரமணியம்)

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
# பத்தாண்டுத் தொலைநோக்குத் திட்டம்

---

## உயர்மட்டக்குழு

---

1. முனைவர் சி. சுப்பிரமணியம் (கூட்டுநர்)
   துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

2. முனைவர் ய.சு. இராசன் (தலைவர்)
   முதன்மை ஆலோசகர் இந்தியத் தொழில் கூட்டமைப்பு குர்கவான்

3. முனைவர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
   அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத்துறை

4. முனைவர் ச. அகத்தியலிங்கம்
   முன்னைத் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

5. முனைவர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்
   தலைவர் பாரதிய வித்யா பவன், கோயம்புத்தூர்

6. முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
   முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர்
   பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

7. முனைவர் ம. இராசேந்திரன்
   இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

8. திருமிகு சுஜாதா
   எழுத்தாளர், சென்னை

9. முனைவர் வி. கிருஷ்ணமூர்த்தி
   கணினி அறிஞர், சென்னை

10. முனைவர் க. பாஸ்கரன்
    பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

## வரும் பத்தாண்டுகளுக்கான தொலை நோக்குத் திட்டம்

## கருத்துரு அறிக்கை

### தோற்றுவாய்

- தமிழ்மொழி. கலை, பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாக்கவும், ஆராயவும், உலகுக்கு அறிமுகம் செய்யவும், காலத்துக் கேற்ற புதுமைகளைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வரவும், திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் உயரிய இலக்குகளை முன் வைத்து 1981 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நிறுவனம் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

- இத்தகைய பல்கலைக்கழகம் குறித்து முதன் முதல் கனவு கண்டவர் பாரதியார். 1906 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் குறித்து எழுதிய கட்டுரையில் கவிஞர் குறிப்பிடுகிறார்:

    **மதுரைச் சங்கம் ஓர் தமிழ் யூனிவர்சிடியாக வளர்ச்சி பெற வேண்டும் என்பதே நமது நோக்கம். நவீன சயின்ஸ் பரிசோதனைகளையும் மற்றுமுள்ள சாஸ்திர அற்புதங் களையும் தமிழர்களுக்குத் தமிழ்ப் பாஷையிலேயே கற்பிக்கக் கூடிய பண்டிதர்களும் கருவிகளும் வேண்டும்.**

    **தமிழ்ப் பாஷை ஆராய்ச்சி மட்டிலும் செய்தால் போதாது. தமிழ்ப் பாஷையை எல்லா வகையிலும் பெருமைப் படுத்தித் தமிழர்களின் அறிவுக்கே மேற்படி சங்கம் ஓர் மூலஸ்தானமாக விளக்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.**

- மதுரையை மையப்படுத்திய மகாகவியின் கனவு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகமாக உருப்பெற்றிருக்கிறது. ஆயினும் முழுமையை நோக்கிய பயணத்துக்கு இன்னும் பல தொலை நோக்குத் திட்டங்கள் தேவை.

## இன்று

- தமிழ்ப் பல்கலைக்கழகம் இன்று ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப்புலம் மற்றும் அறிவியல் புலம் என ஐந்து புலங்களையும் இருபத்து மூன்று துறைகளையும் கொண்டு திகழ்கிறது. 350க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

- இலக்கிய ஆய்வுகள், மொழியியல் ஆய்வுகள், வரலாற்று ஆய்வுகள், மொழி பெயர்ப்புகள், கலைக்களஞ்சிய, அகராதிப் பதிப்புகள், அயல் நாட்டவர்க்கு மொழி கற்பித்தல், நாட்டுப்புற இயல், மருந்தியல் ஆய்வுகள் எனப் பன்முக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

- கணிப்பொறி இயல் முதல் கட்டடக் கலை இயல் வரை கற்பிக்கப்பட்டு முதுகலை, முனைவர் பட்டம் வரை மாணவர்கள் பயின்று வருகின்றனர். நாடகமும் இசையும் சிற்பமும் தனித்துறைகளாய்க் கலை வளர்க்கின்றன. சுவடிகள் திரட்டப்பட்டு ஆராயப்படுகின்றன. 1,40,000 நூல்கள் கொண்ட நூலகம் இயங்குகின்றது. ஒரு சிறந்த அருங்காட்சியமுகம் அமைந்துள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளம் வெகுவிரைவில் செயலாற்ற உள்ளது. இருபத்தைந்தாண்டு நிறைவு பெற்று பல்கலைக்கழகம் வெள்ளி விழாக் காணும் வேளை இது.

## உயர்மட்டக் குழு

- வெள்ளிவிழாக் காணும் பொழுதில் வரும் பத்தாண்டுக் காலத்துக்கு ஒரு தொலை நோக்குத் திட்டத்தை வகுக்கும் நோக்குடன் உயர்மட்டக் குழு ஒன்றைப் பல்கலைக்கழகம் அமைத்துள்ளது.

- உலக மயமாக்கலும், புதிய பொருளாதாரக் கொள்கையும் பெருமளவுக்குக் கல்வியுலகில் மாற்றங்களை உருவாக்கிக்

கொண்டிருக்கிற காலம் இது. நமது மொழியும், பண்பாடும் புதிய அறை கூவல்களைச் சந்திக்கிற சூழலில் உள்ளன. இலக்கியமும், மொழியும் தங்களுக்கு உரிய இடத்தைக் காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

- மிக விரைவாக மாற்றங்களை உள் வாங்கிக் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் செயலாற்ற வேண்டியது அவசியம்.

- செழுமையான பழமையை அறிவியல் நெறி நின்று பாதுகாக்கவும், வியப்பு மிகும் புதுமைகளைத் தமிழ் மொழி ஏற்றுப் பயனடையவும் திட்டங்களை வகுத்தாக வேண்டும்.

- அதே சமயம் பொருளாதார வலிமையைச் சுயமாகக் பெற்று வளர வேண்டிய நிலையிலும் பல்கலைக்கழகத்தைக் கட்டமைக்க வேண்டியது இன்றியமையாதது.

- இதைக் குறித்து விரிவான தொலைநோக்குத் திட்ட வரைவு அறிக்கையை (Vision Statement) உருவாக்கும் பொருட்டு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மை நோக்கங்கள்**

- தமிழ்ப் பல்கலைக்கழகம் தேசிய அளவிலும், உலக அளவிலும் மதிக்கத்தக்க உயர் கல்வி நிறுவனமாக வளர்ந்தோங்க வேண்டும்.

- தமிழ் மொழி, பண்பாடு சார்ந்த அனைத்துத் துறைகளுக்கும், கலைச் சொல்லாக்கங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகமே இறுதி முடிவு எடுக்கும் தர நிறுவனமாக அமைய வேண்டும்.

- இணைய தளங்களின் வழி அனைத்துத் தமிழ் இலக்கியம், இலக்கணம், கலைகளுக்கு முழுமையான தகவல் களஞ்சியமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் செயல்பட வேண்டும்.

- தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகம் முழுவதிலும் இருக்கிற தமிழ் ஆய்வுத்துறைகளோடும் தமிழ் ஆய்வாளர்களோடும் நெருங்கிய தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும்.

- திராவிட மொழிப் பல்கலைக்கழகங்களோடு மட்டுமல்லாது மொழி வளர்க்கும் தேசிய நிறுவனங்களுடன் பிணைப்பு அமைதல் வேண்டும். தில்லியிலும் முக்கிய இந்திய நகரங்களிலும் பல்கலைக்கழகத் தொடர்பு மையங்கள் தேவை.

- கணிப்பொறி வழி தமிழுக்குக் கிடைக்கும் செய்திகளையும், அறிவு வளங்களையும், ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும் வண்ணம் UNICODE முறையில் தெரிந்து கொள்ள மென் பொருள் காண வேண்டும்.

- *சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்*

  *செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்*

  என்ற மகாகவியின் கனவை வளம்பெறச் செய்யும்படி மொழி பெயர்ப்புக்களைக் குவிக்க வேண்டும்.

- தொலை நிலைக் கல்வித் துறையை விரிவாக வளர்த்து தமிழ் கற்கவும், ஆராயவும் திட்டங்கள் வகுத்துப் பல்கலைக்கழகப் பொருளாதார வளங்களைச் செழுமை செய்ய வேண்டும்.

- இன்று உலகம் முழுவதும் தமிழர்கள் பல தொழிலகங்களில் பணிபுரியும் நல்வாய்ப்புப் பெற்றிருப்பதால், அவர்களுடன் பயனுள்ள உறவுகளை வளர்த்துத் தமிழ்ப் பல்கலைக்கழம் தன்னை அறிவு, ஆற்றல், பொருளாதார வளம் மிக்கதாகச் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- தமிழ் மொழி வெறும் பண்பாட்டு அடையாளமாக மட்டுமல்லாது இன்றைய உலகின் நவீனத்துவ ஊடகமாக எல்லாத் துறைகளிலும் வளம் பெறுதல் இன்றியமையாதது.

- நூல்கள், இதழ்கள், இணையம், குறுந்தகடு என அனைத்து ஊடகங்களின் வழி தமிழைச் செயல்திறம் மிக்கதாக அமைக்க வேண்டும்.

**வேண்டுகோள்**

- மேற்குறித்த இலக்குகளை முன்வைத்து பொதுமக்களின் நடைமுறைத் தமிழ், ஆய்வுத் தமிழ், அறிவியல் தொழில் நுட்பத் தமிழ் ஆகிய பன்முகத் தமிழை வளர்க்கவும்,

  புலம்பெயர் தமிழர், இந்தியத் தமிழர், தமிழ் ஆர்வலர் பயன்பெறுமாறு மொழிப் பயிற்சி / தொடர்புகளை வலுப்படுத்தவும், தமிழ் சார்ந்த தகவல் சேவை மையமாகச் செயல்படவும்,

  பல்கலைக்கழக நிதி ஆதாரங்களை மிக வலிமை மிக்கதாக ஆக்கவும்,

  தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நேற்றையும், இன்றையும் இணைக்கும் பாலமாகவும் நாளையின் தேவைகளை நிறைவு செய்யும் களஞ்சியமாகவும் மாற்றவும்,

  மனிதவளம், கருவிகள் கட்டடங்கள் என அடிப்படை வளங்கள் நிரம்பியதாகப் பல்கலைக்கழகத்தை உயர்த்தவும்,

  தங்களின் மேலான கருத்துக்கள் பெரும்பயன்தந்து உதவுமென உயர்மட்டக்குழு கருதுகிறது.

- இத்துடன் அமைந்துள்ள வினா நிரலைத் தங்கள் பரிந்துரைகளால் நிறைவு செய்து துணைவேந்தர் அவர்களுக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம்.

- தமிழ்ப் பல்கலைக்கழகம் நம் அனைவருக்கும் உரிமையும் உறவுமுடையது என்ற நோக்கோடு, அது நம் பண்பாட்டின் அடையாளம் என்ற பெருமிதத்தோடு தங்கள் கருத்துக்களைத் தர வேண்டும் என உயர்மட்டக் குழுவின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

- வெள்ளிவிழாக் காணும் தமிழ்ப் பல்கலைக்கழகம் காலம் வியக்கும் தமிழ்ப் பேரொளியாகச் சுடர் வீச உங்கள் பங்களிப்பைத் தாருங்கள்

**முனைவர் சி. சுப்பிரமணியம்**
துணைவேந்தர்
(உயர்மட்டக்குழு சார்பாக)

# வினா நிரல்

**(தேவையெனில் பக்கங்கள் சேர்க்க)**

---

1. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உலக அளவில் மதிப்பு மிக்கதாக அமைக்கத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த ஐந்து குறிக்கோள்கள் எனத் தாங்கள் எவற்றைக் குறிப்பீர்கள்?

2. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆயிரம் ஏக்கர் வளாகத்தைப் பயன்தரும் வண்ணம் சீரமைக்க வழி வகைகள் யாவை?

3. யூனிகோடு முறையைக் கணினித் தமிழில் பின்பற்ற மென்பொருள் காணும் முயற்சியை எவ்வாறு மேற்கொள்வது?

4. தமிழ்ப் பல்கலைக்கழகம் பொருளாதாரத் தன்னிறைவு பெறத் தாங்கள் கூறும் கருத்துக்கள் / வாய்ப்புக்கள் விவரம் தருக.

5. தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்தை எவ்வெவ்வாறு செழுமைப்படுத்தலாம்? தகவல் சேவைக் களமாக எவ்வெவ்வாறு வளப்படுத்தலாம்?

6. பல்நோக்குக் குறுந்தட்டு, ஒலிப்பேழை, கணினி இதழ், ஆய்வுத் திங்கள் இதழ் வெளியிடுவது குறித்துக் கருத்துரைக்க.

7. தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் வேலை வாய்ப்பில் முன்னிற்க ஒவ்வொரு துறையிலும் செய்யத் தக்கன யாவை?

8. இந்திய/பிற நாட்டுப் பல்கலைக்கழக மொழித்துறைகளோடு எந்த வகைகளில் நெருங்கிய தொடர்புகளை வளர்க்கலாம்? தமிழ் இருக்கைகளை நிறுவ என்னென்ன செய்யலாம்?

9. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இணையப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம், சரசுவதி மகால் நூலகம் ஆகியன தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தலைமையில் செயலாற்றல் கூடுமா?

10. தமிழ்நாட்டுக் கல்லூரி / பல்கலைக்கழகத் தமிழியல் துறைகளோடு இணைந்து தமிழ்ப் பல்கலைக்கழகம் செயல்படத் , திட்டங்கள் கூறுக.

11. கல்லூரி / பள்ளித் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுக்கும் பொறுப்பு தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குத் தரப்படலாமா?

12. உலகளாவிய தமிழர் / தமிழ் ஆர்வலர் தொடர்புகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பயன் கொள்ள வழிவகைகள் கூறுக.

13. பல்கலைக்கழகப் பதிப்புத் துறையைச் சீரமைத்து நூல் வெளியீடுகளை இலாபத்துடன் விற்பனை செய்ய வழிகள் / உத்திகள் கூறுக.

14. மொழி பெயர்ப்புத்துறையைச் சிறப்பு நிறுவனமாக வளர்ப்பது ஏற்புடையதாகுமா? இத்துறை செய்யத்தகுந்த மொழி மொழிபெயர்ப்புப் பணிகள் யாவை?

15. பல்கலைக்கழக வளாகத்தில் பார்வையாளர்களை ஈர்க்கும் உயரிய அருங்காட்சியகம் அமைய முன் மாதிரிகள் (அ) செய்யத்தக்க பணிகளைக் கூறுக.

16. களஞ்சியங்கள் / அகராதிகள் ஆகிய கருவி நூல்களை மேலும் வகைப்படுத்தி வெளியிடக் கருத்துரைகள் தருக.

17. நிரந்தரக் கலைச் சொல்லாக்க மையம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அமைப்பதற்கும், அந்த மையத்தின் கலைச் சொற்களே அனைவராலும் பின்பற்றப்படுவதற்கும் திட்டங்கள் கூறுக.

18. வரலாறு, தொல்பொருள் ஆய்வுகளில் விடுபடக்கூடாத திட்டங்களை வரிசைப்படுத்துக.

19. மைய அரசின் செம்மொழித் திட்டத்திலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகம் பெறத்தக்க உதவிகள் / பயன்கள் / திட்டங்கள் யாவை?

20. தமிழ் மொழியை இன்றைய / நாளைய புதிய அறைகூவல்களுக்கு ஏற்பப் பேணி வளர்க்க நெறிமுறைகள் கூறுக.

21. புதிய விரிவாக்கத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளத் தேவையான சட்ட / விதித் திருத்தங்கள் உண்டெனில் கூறுக.

22. மேற்குறித்த வினா நிரலில் விடுபட்டவையெனத் தாங்கள் கருதும் இன்னபிற பொருள்களையும் / திட்டங்களையும் இங்கு தருக.

கையொப்பம்